**கம்பு..தருமே தெம்பு...**

புன்செய் நிலங்களில், புன்செய் (மானாவாரி) பயிர்களையும்... நன்செய் நிலங்களில் நன்செய் பயிர்களையும் சாகுபடி செய்வதுதான் பயிர்வாரி முறை. ஆனால், பணப்பயிர் சாகுபடி மீதான ஆர்வத்தின் காரணமாக, பயிர்வாரி முறையை மாற்றி, புன்செய் நிலங்களில் எல்லாம் புதுப்புதுப் பயிர்களை சாகுபடி செய்வதில்தான் அதிக ஆர்வம் காட்டப்படுகிறது. இதன் காரணமாகத்தான் கம்பு, சோளம்... போன்ற சிறுதானியப் பயிர்களெல்லாம் வழக்கொழிந்து போய்க் கொண்டிருக்கின்றன.



இத்தகையச் சூழலிலும் சிறுதானியங்களை மீட்டெடுத்து சாகுபடி செய்யும் விவசாயிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். குறிப்பாக, இயற்கை விவசாயிகள் இந்த விஷயத்தில் அதிக அக்கறை காட்டி வருகின்றனர். அத்தகையோரில் ஒருவர், வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் அருகிலுள்ள மண்டலநாயனகுண்டா கிராமத்தைச் சேர்ந்த அங்கமுத்து.

'பாரம்பரியமான விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த நான், ஆசிரியர் பயிற்சி முடிச்சிட்டு விவசாயம் பாக்க ஆரம்பிச்சுட்டேன். 10 ஏக்கர் நிலம் இருக்கு. மா, காய்கறி, நிலக்கடலை, நெல், மரவள்ளி, சோளம், கம்புனுதான் அதுல விவசாயம் பார்த்துக்கிட்டிருந்தேன். 2000-ம் வருஷத்துக்கு மேல தண்ணிப் பத்தாக்குறையாகிடுச்சு.

அதனால மானாவாரிப் பயிர்கள அதிகப்படுத்திட்டேன். இந்த போகத்துல தக்காளி, நெல் போட்டிருக்கேன். அதோட 70 சென்ட் நிலத்துல கம்பு போட்டிருந்தேன். அது, இப்போ நல்ல விளைச்சல் கண்டு நிக்குது' என்று சொன்ன அங்கமுத்து, 70 சென்ட் நிலத்தில் கம்பு சாகுபடி செய்யும் முறை பற்றி ஆரம்பித்தார். அதை அப்படியே பாடமாகத் தொகுத்துள்ளோம்.

## களர் மண் ஆகாது!

'கம்புக்கு வயது 120 நாட்கள். களர் மண்ணைத் தவிர்த்து, தண்ணீர் தேங்காத எல்லா மண் வகைகளும் ஏற்றவை. நடவுக்கு வைகாசிப் பட்டம் சிறந்தது. இறவையில் சாகுபடி செய்யும்போது நாற்று விட்டு நடவு செய்தால், நல்ல விளைச்சல் கிடைக்கும்.

**70 சென்ட் நிலத்தில் சாகுபடி செய்ய அங்கமுத்து சொல்லும் செலவு-வரவுக் கணக்கு**

| விவரம் | செலவு | வரவு |
|---|---|---|
| எரு | 1,400 | |
| உழவு | 1,200 | |
| பார் பிடிக்க | 500 | |
| விதை | 200 | |
| நடவு | 500 | |
| களை எடுக்க | 500 | |
| அறுவடை | 700 | |
| அடித்து சுத்தப்படுத்த | 1,000 | |
| 12 குவிண்டால் மூலம் வரவு | | 14,400 |
| மொத்தம் | 6,000 | 14,400 |
| நிகர லாபம் | | 8,400. |

## 70 சென்ட் நிலத்துக்கு 1 கிலோ விதை!

70 சென்ட் நிலத்தில் நடவு செய்வதற்கு, ஒரு சென்ட் நிலத்தில் நாற்றங்கால் அமைக்க வேண்டும். சிறிய அளவு இடம் என்பதால், ஏர் ஓட்ட தேவையில்லை. இந்த நிலத்தை மண்வெட்டி மூலம்

கொத்தி விட்டாலே போதுமானது. பின்னர் ஒரு வண்டி எருவைக் கொட்டிக் கலைத்து, ஒரு கிலோ கம்பு விதையைத் தூவி லேசாகக் கிளறி விட வேண்டும். ஒரு நாள் விட்டு, ஒரு நாள் தண்ணீர் தெளித்து வந்தால், 18 நாட்களில் நாற்று தயாராகிவிடும்.

### முக்கால் அடி பார்!

இதற்கிடையில், சாகுபடிக்குத் தேர்வு செய்திருக்கும் நிலத்தைத் தயார் செய்யவேண்டும். 70 சென்ட் நிலத்துக்கு, 5 டன் தொழுவுரம் என்ற கணக்கில் கொட்டிக் கலைத்துவிட வேண்டும். பிறகு, டிராக்டர் மூலமாக குறுக்கு-நெடுக்காக நான்கு சால் உழவு ஓட்ட வேண்டும். மாட்டு ஏர் மூலம் முக்கால் அடிக்கு பார் ஓட்டி, ஆட்களை விட்டு சரி செய்து கொள்ள வேண்டும். பிறகு, தண்ணீர் கட்டி நிலத்தை ஈரப்படுத்தி... பாரின் ஒரு பக்கம் மட்டும் 18 முதல் 20 நாள் வயதுடைய நாற்றுகளை நடவு செய்ய வேண்டும்.



அங்கமுத்து

### இடுபொருட்களே தேவையில்லை!

தொடர்ந்து, வாரம் ஒரு முறை தண்ணீர் கட்டினால் போதுமானது. 20-ம் நாள் பயிர் நன்கு வளர்ந்து விடும். 25-ம் நாளில் களை எடுத்து இரண்டு டன் தொழுவுரத்தை இறைத்துவிட வேண்டும். வேறு இடுபொருட்கள் எதுவும் தேவையில்லை. இயற்கை முறையில் சாகுபடி செய்யும்போது பூச்சி, நோய் தாக்குதல் அறவே இருக்காது. 100 முதல் 110 நாட்களில் கதிர்கள்

அறுவடைக்குத் தயாராகிவிடும். காலை நேரத்தில் அறுவடை செய்வது நல்லது. கதிர்களை இயந்திரம் மூலம் அடித்து, தானியங்களைப் பிரித்துக் கொள்ளலாம்.'

## 12 குவிண்டால் மகசூல்!

சாகுபடி பாடம் முடித்த அங்கமுத்து, "70 சென்ட் நிலத்தில், 12 குவிண்டால் வரை மகசூல் கிடைக்கும். இன்னிக்குத் தேதிக்கு குவிண்டால் 1,200 ரூபாய்க்கு விலை போயிட்டிருக்கு. அறுவடைக்குப் பின்ன எஞ்சுற கம்புத் தட்டையை வெட்டி மாடுகளுக்குத் தீவனமா கொடுக்கலாம். கூரை மேயறதுக்கும் பயன்படுத்திக்கலாம்" என்று உற்சாகமாக சொன்னதோடு, "கம்பை அறுவடை செய்ததும், அந்த நிலத்துல எந்தப் பயிரைப் போட்டாலும் நல்லா வரும்' என்று கூடுதல் தகவல் தந்து முடித்தார்!

**தொடர்புக்கு**
அங்கமுத்து
திருப்பத்தூர் அருகில் மண்டலநாயனகுண்டா கிராமம்
வேலூர் மாவட்டம்
அலைபேசி: 97515-89280

**ஆதாரம் :** www.vikatan.com பசுமை விகடன் வெளியிட்டான தேதி, 10.10.2011